**தலைப்பு 270 - அம்பாறை மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

தலைப்பு 270 – அம்பாறை மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஜூலை 25 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் எனும் வரையரைக்குட்பட இயலுமானளவு கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவாறு அமைந்தனவாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்கு விதிகள் என்பவற்றிற்கு இணங்கப் பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

மாவட்டச் செயலகத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ரூபா 842.25 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டினது முடிவளவில் அம் மொத்தத் தொகையும் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் வருமாறு

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>நிகர நிதியேற்பாடு | பயன்பாடு |
|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| மீண்டுவருவன | 778.25 | 778.25 |
| மூலதனம் | 64.00 | 64.00 |
| மொத்தம் | **842.25** | **842.25** |

**(ஆ) ஏனைய அமைச்சுகளாலும் திணைக்களங்களாலும் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

பல்வேறு பணிகளுகென ஏனைய 09 அமைச்சுகளாலும் 08 திணைக்களங்களாலும் ரூபா 1,540.17 கூட்டு மொத்தமான நிதியேற்பாடு மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந் நிதியேற்பாட்டில் ரூபா 1,522.58 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 17.59 மில்லியன் அல்லது 1.14 சதவீதம் சேமிப்புக்குள்ளாகியது.

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்டச் செயலகத்தின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாரளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பன பின்வருமாறு.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதி கூடிய எல்லை | உள்ளவாறானது | அதிகுறைந்த எல்லை | உள்ளவாறானது | அதி கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 58.00 | 50.50 | 38.00 | 43.83 | 170.00 | 153.36 |

**2.3 பொது வைப்புக் கணக்கு**

மாவட்டச் செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்குகளது மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 574.25 மில்லியன் ஆகும். விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | பெறுமதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0089/000 | 7.62 |
| 6000/0000/00/0002/0119/000 | 0.35 |
| 6000/0000/00/0011/0599/000 | 300.00 |
| 6000/0000/00/0014/0013/000 | 9.11 |
| 6000/0000/00/0016/0067/000 | 208.21 |
| 6000/0000/00/0017/0020/000 | 4.83 |
| 6000/0000/00/0020/0011/000 | 44.13 |
| மொத்தம் | 574.25 |

**2.4 கணக்காய்வு அவதானிப்புகள்**

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள் என்பவற்றின் பிரகாரம், மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புகள மேலே 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புகளுக்குட்பட

திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய அவதானிப்புகளில் போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. போதுமானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

மாவட்டச் செயலகம் பின்வரும் பதிவேடுகளைப் பேணியிருக்கவில்லை. மற்றுமொரு பதிவேடு முறையாகவும் நாளது வரையாக்கப்பட்டும் இருக்கவில்லை எனக் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டின் வகை | குறித்த பிரமாணம் | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (i) | கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அங்கத்தவர்களது வருகைக்கான பதிவேடு | அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டல் | பேணப்படவில்லை. |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் பழுதுபார்ப்பதற்கு 2014 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட தொகை ரூபா 48.00 மில்லியன் ஆகும். அதில் ரூபா 31.95 மில்லியன் குறித்த நோக்கத்திற்காகச் செலவிடப்பட்டு ஆண்டின் இறுதியளவில் ரூபா 16.05 மில்லியன் எஞ்சியிருந்தது. எனினும், திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெறாது அது பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது. அவ்வாறு வைப்பிலிடப்பற்றவற்றில் மீளாய்வாண்டின்போது ரூபா 14.85 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 1.20 மில்லியன் குறித்த நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின்போது செயற்திட்டம் ஒன்றிற்குக் கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 969,539 பெறுமதியான காசோலை ஒன்று வரையப்பட்டு மாவட்டச் செயலகத்தால் சாய்ந்தமருது பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதும், அதில் ரூபா 270,234 பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 27001 – அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின்போது அத் தினத்தில் உள்வாறு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 445,631 ஆகும். அந்நிலுவை மீதிகள் 06 மாதங்கள் முதல் 36 மாதங்கள் வரையிலான காலவீச்சில் இருந்த போதும், அறவீடு தொடர்பான தொடர் நடவடிக்கைகள் நலிவுற்ற நிலையில் இருந்தன.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

நிந்தவூர் பிரதேச செயலகத்திற்கு மாவட்டச் செயலகமும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றும் வழங்கிய ரூபா 167,000 பெறுமதியுடைய 05 நீர் இறைக்கும் மோட்டார்கள் 11 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

**3.5 இணங்காமை**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

கல்முனை பிரதேச செயலகம் நிதிப்பிரமாணம் 137 உடன் இணங்காதவாறும் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரின் அங்கீகாரமின்றியும் ரூபா 424,838 கொடுப்பனவை மேற்கொண்டிருந்தது.

**(ஆ) வரித் தேவைகளுடன் இணங்காமை**

**ஒப்பந்தங்களுக்கு வரி அறவிடுதல்**

அம்பாறை மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகங்கள் ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்கையில் பெறுமதி சேர் வரிக்கான பதிவு இரத்துச் செய்யப்பட்டோருக்கு முறையே ரூபா 107,460 மற்றும் ரூபா 192,852 என மொத்தமாக ரூபா 300,312 பெறுமதி சேர் வரியைக் கொடுப்பனவு செய்திருந்தது.

**3.6 உள்ளூர் நிதியளிப்பின் மூலம் செயற்திட்டங்களை அமுலாக்குதல்**

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல், செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடல் மற்றும் செயற்திட்டத் தாமதம் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது வெளியாகிய சில சந்தர்ப்பங்கள் வருமாறு.

(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்

மாவட்டச் செயலகம் பின்வரும் செயற்திட்டங்களை ஆரம்பிக்கவில்லை.

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்க வேண்டிய திகதி | ஆரம்பிக்காதற்கான காரணம், சுருக்கமாக |
|---|---|---|---|---|
| (i) | 2014 மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹாஓயா பிரதேச செயலகப் பிரிவில் நூலகக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2,876,790 | 2014.11.13 | மஹாஓயா பிரதேச சபையால் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பு காரணமாக ஆரம்பிக்கவில்லை. |
| (ii) | 2014 ஆம் ஆண்டிற்கென பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மாகாண எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹா ஓயா சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தைப் புதுப்பித்தல் | 3,000,000 | 2014.11.11 | ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தத்தை வழங்குவதில் ஏற்பட்ட் தாமதம் காரணமாக ஆரம்பிக்க முடியாமை |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | நூறு நாள் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கல்முனைக்குடி 02 பிரதேசத்தின் மத்திய கரையோரப் பாதையில் நீர் வழிந்தோடுவதற்கான வடிகாண் நிர்மாணித்தல் | 1,000,000 | 2015.08.25 | பிரதேச மக்களின் ஒப்பந்தகாரருக்கு எதிரான போக்கினால் ஆரம்பிக்கவில்லை. |
| (iv) | தமண பிரதேச செயலகம் கமநெகும பாதீட்டு முன்மொழிதல்களை அமுலாக்குவதன் கீழ் சுய வேலை வாய்ப்புக்கென ஆடுகளை வழங்கும் செயற்திட்டம். | 500,000 | 2014.12.05 | குறித்த செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கான காலம் போதியதாக அமையாமையால் அமுலாக்கப்படாமை |

**(ஆ) செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடல்**

மாவட்டச் செயலகம் பின்வரும் செயற்திட்டங்களை ஆரம்பித்திருந்த போதும், அச் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிட்டிருந்தது.

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | கைவிடுவதற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ----------------------------- | ----------------------------- | ----------------------------- | ----------------------------- | ----------------------------- |
| | | ரூபா | | ரூபா | |
| (i) | 2014 பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் மஹா ஓயா பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள கலுபெனிபெத்த முன் பள்ளிக் கட்டிடம் மற்றும் மரணாாதாரச் சங்கக் கட்டிடம் ஆகியவற்றை நிர்மாணித்தல் | 100,000 | 2014.08.20 | 49,138 | சங்கத்தின் நிதிப் பற்றாக்குறை காரணமாக அமுலாக்கப்படவில்லை. |
| (ii) | 2013 தேசத்துக்கு மகுடம் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹாஓயா பிரதேச செயலகப் பிரிவில் அமைந்து உள்ள டெம்பிட்டிய வித்தியாலயத்திற்கு ஆசிரியர் விடுதியை நிர்மாணித்தல் | 2,620,112 | 2013.03.25 | 1,575,560 | சிரமதான அடிப்படையில் பணிபுரிவதற்கு சிவில் பாதுகாப்பு படையணி இணக்கம் தெரிவித்த போதும், குறித்தவாறு அப்படையணி சிரமதானம் செய்யத் தவறியமையால் அமுலாக்கப்படவில்லை. |
| (iii) | 2017 ஆசிய விளையாட்டு போட்டிகளுடன் இணைந்தவாறு கிராமிய விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹா ஓயா பிரதேச செயலகப் பிரிவில் வராபிட்டிய வித்தியாலய விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல் | 191,304 | 2014.11.20 | 13,300 | அமுலாக்கும் நிறுவனமான மஹாஓயா வலயக் கல்வி அலுவலகம் இதனை பூர்த்தி செய்ய தவறியிருந்தது. |
| (iv) | ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதியதலாவ பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள மரங்கல சனசமூக நிலையத்தை நிர்மாணித்தல் | 980,000 | 2014.10.10 | 354.172 | 2015 ஆம் ஆண்டில் தொடர் வேலை நிரலில் சேர்த்துக் கொள்ளப்படாமையால் இச் செயற்திட்டத்தின் எஞ்சிய பகுதி பூர்த்தி செய்யப்படவில்லை. |

(இ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

மாவட்டச் செயலகம் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம் அவதானிக்கப்பட்டது.

| | செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பித்த திகதி | முடிவடைய வேண்டிய திகதி | முடிவடைந்த திகதி | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | | ரூபா | |
| (i) | தமண பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கீனவத்த வித்தியாலயத்தில் ஈ அருங்கலைக் கூடத்தை நிர்மாணித்தல் | 1,987,752 | 2014.11.20 | 2014.12.25 | 2015.12.28 | 1,708,258 | அதிக மழையாலும் கட்டு நிதியைப் பெறுவதில் தாமதம் காரணமாகவும் நிர்மாண வேலை தாமதமடைந்தது. |
| (ii) | தமண பிரதேச செயலகப் பிரிவில் உள்ள தமண மஹா வித்தியாலயத்தில் ஈ அருங்கலைக் கூடத்தை நிர்மாணித்தல் | 1,987,752 | 2014.07.21 | 2014.12.31 | 2015.12.28 | 1,609,141 | அதிக மழையாலும் கட்டு நிதியைப் பெறுவதில் தாமதம் காரணமாகவும் நிர்மாண வேலை தாமதமடைந்தது. |
| (iii) | மஹா ஓயா பிரதேச செயலகப் பிரிவில் உள்ள எஹலகஸ்பள்ளவில் பால் சேகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல் | 200,000 | 2014.08.20 | 2014.11.20 | 2015.12.28 | 149,173 | போதிய பணம் பெறப்படாமை மற்றும் ஒப்பந்தகாரர் நிர்மாண வேலையைத் தாமதித்தமை |
| (iv) | மஹா ஓயா பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல் | 191,210 | 2014.11.20 | 2014.12.30 | 2015.12.26 | 191,210 | காணிச் சவீகரிப்பில் சிக்கல் நிலவியதால் தாமதமடைந்தது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (v) | அம்பாறை பிரதேச செயலகப் பிரிவில் சித்சரண ஆலோசனை நிலையத்தை நிர்மாணித்தல் | 2.860,665 | 2007 | முடிவடைய வேண்டிய திகதி குறிப்பிடப்பட வில்லை | 2016.03.08 | 2,860,664 | பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்வதில் நிலவிய சர்ச்சையால் தாமதமடைந்தது. |

**3.7 செயலாற்றல்**

2015 வருடாந்தப் பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு

**போதுமான அளவு நிறைவேறாத பிரதான பணிகள்**

மாவட்டச் செயலகத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது போதுமான அளவு நிறைவேற்றப்பட்டிராத சில பணிகள் தெரிய வந்தன. விபரம் வருமாறு

(அ) அக்கரைப்பற்று பிரதேச செயலகம் 2015 ஆம் ஆண்டில் 6,552 கோழிக் குஞ்சுகளைக் கொள்வனவு செய்வதற்கு 2014 ஒக்டோபர் 13 ஆந் திகதியன்று கிழக்கு மாகாண சபையின் கால்நடை உற்பத்திப் பிரிவுக்கு ரூபா 1,964,650 கொடுப்பனவு செய்திருந்தது. 2015 திசெம்பர் 22 ஆந் திகதியளவிலும் அக் கோழிக் குஞ்சுகள் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறுவர் விவகார அரசாங்க அமைச்சின் மூலம் முன் பள்ளிச் சிறுவர்களுக்கு ஒரு கோப்பை பால் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தமண மற்றும் அம்பாறை பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 88 பாடசாலைகள் தகுதி பெற்றிருந்த போதும், 19 பாடசாலைகளில் மாத்திரம் இந் நிகழ்ச்சித்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது.

(இ) நூறு நாள் விசேட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தமண பிரதேச செயலகத்தால் அமுலாக்குவதற்கு எண்ணிய பள்ளச்சேனை பிரதான ஓடைப் பாதையில் 02 வான் கதவுகளை (REGULATORS) அமைக்கும் செயற்திட்டத்திற்கு ரூபா 1 மில்லியன் நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. சரியான மதிப்பீட்டைத் தயாரிக்காமையால் செயற்திட்டத்தை அமுலாக்குவது தவறியிருந்தது.

**3.8 ஒப்பந்த நிர்வாகம்**

மாவட்டச் செயலகம் அமுலாக்கிய ஒப்பந்தங்கள் சம்பந்தமாக மேற்கொண்ட கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) உஹன பிரதேச செயலகம் உஹன கொனாகொல்ல உப அஞ்சல் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கு முதலாவது ஒப்பந்தக்காரருடன் ரூபா 860,706 மதிப்பீட்டுப் பெறுமதியிலான உடன்படிக்கைக்கு ரூபா 773,661 கொடுப்பனவு செய்திருந்தது. எனினும், அவர் குறித்த செயற்திட்டத்தைக் கைவிட்டமையால் அதன் எஞ்சிய வேலையை இரண்டாவது ஒப்பந்தக்காரர் மூலம் நிறைவேற்றுவதற்கு ரூபா 162,624 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, பொருத்தமான ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்யாமையால் ரூபா 75,579 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மாகாண எழுச்சி நிதியேற்பாட்டின் கீழ் அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் ரூபா 3.5 மில்லியன் நிதியேற்பாட்டின் மூலம் 2015 திசெம்பர் 23 ஆந் திகதியளவில் சிறுவர் பூங்கா நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்திருந்தது. அச் சிறுவர் பூங்காவில் உடைந்திருந்த 06 கொங்ரீட் தூண்களை ஒப்பந்தக்காரால் மீண்டும் புதுப்பிக்காததுடன், பூங்காவும் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் இருந்தமை அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையின்போது தெரிய வந்தது.

**3.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதில் உள்ள குறைபாடுகள்**

அம்பாறை மாவட்டச் செயலகம் 2015 திசெம்பர் மாதத்திற்கெனத் தயாரித்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்பட்ட சீராக்கம் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் தெரிய வந்த தகவல்கள் பின்வருமாறு

| சீராக்கல் தொடர்பான விபரம் | | 6 மாதங்களுக்கு மேல் 1 ஆண்டிற்கு குறைவாக | காலப்பகுப்பாய்வு<br>1 ஆண்டிற்கு மேல் 03 ஆண்டுகளுக்கு குறைவாக | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தேறாத வைப்புகள் | - | 315,000 | 315,000 |
| (ii) | வழங்கப்பட்டு, கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் காசோலைகள் | 202,773 | 689,907 | 892,680 |
| (iii) | இனங்காணப்படாத வரவுகள் | 381,992 | 66,047 | 448,039 |

### 3.10 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகம் ஈடுபட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவாறிருந்தன. அவ்வாறாக அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

#### (அ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டியிலிருந்து விலகல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கல்முனை பிரதேச செயலகம் அரசாங்க பொருட் கொள்வனவு நடைமுறையைப் பின்பற்றாது ரூபா 622,800 பெறுமதியான எழுதுகருவி வகைக் கையிருப்பை 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கொள்வனவு செய்திருந்தது.

(ii) பிரதேச செயலகம் ஒப்பந்த நடவடிக்கைகளில் ஈடுபடும்போது அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணாக 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 9,673,200 பெறுமதியான 09 ஒப்பந்தங்களை அப்பிரதேசத்தில் அமைந்துள்ள சங்கங்களுக்கு வழங்காது குறித்த பிரதேசத்திற்கு அப்பால் அமைந்துள்ள ஏனைய சங்கங்களின் மூலமாக அவற்றை நிறைவேற்றியிருந்தது.

### 3.11 இழப்புகளும் நட்டங்களும்

அம்பாறை மாவட்டச் செயலகத்திற்குரிய சத்தாதிஸ்ஸபுர களஞ்சியம் 2015 செப்டெம்பர் 21 ஆந் திகதியன்று கள்வரால் சேதமாக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட இழப்பு ரூபா 680,590 என மதிப்பிடப்பட்டிருந்தது. அது தொடர்பாக நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அந் நடவடிக்கைகள் மீளாய்வாண்டு முடிவிலும் பூர்த்தியடைந்திருந்தன.

### 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கர்ப்பிணிகளுக்கு போஷாக்குடனான உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டிற்காக நான்கு பிரதேச செயலகங்கள் உணவுக் கொள்வனவிற்காக வழங்குனருடன் உடன்படிக்கை செய்து கொண்டவாறு மற்றும் வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட கூறுவிலைகள் என்பவற்றின் பிரகாரம் கொடுப்பனவு செய்ய வேண்டிய தொகை ரூபா 4,352,760

ஆகும். எனினும், அதற்காக ரூபா 5,257,999 கொடுப்பனவு செய்யப்பட்டதால் ரூபா 905,239 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.13 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

மாவட்டச் செயலகம் தொடர்பாக 2014 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாக மாவட்டச் செயலகம் திருத்தங்களை மேற்கொண்டிராத பந்திகளுடான தொடர்பு வருமாறு

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு**

| ஆண்டு | பந்தி இலக்கம் | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| 2014 | 154 (6) 3.1 | நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டுப் பேணப்படவில்லை. |
| 2014 | 154(6) 3.5 | முற்பணக் கணக்குகளில் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| 2014 | 154(6) 3.6 | பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்துவதுமான சொத்துக்கள் |
| 2014 | 154(6) 3.9 | கெப் வண்டி ஒன்று பழுதுபார்க்கப்படாது இரண்டு ஆண்டுகளாக தரித்து வைக்கப்பட்டிருந்தமை |

**3.14 முகாமைத்துவ நலிவுகள்**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வைகளின்போது பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தமண பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டி ஒன்று பழுதுபார்த்தலுக்காக 2013 நவம்பர் 06 ஆந் திகதி கராஜ் ஒன்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தும் 2015 திசெம்பர் 08 ஆந் திகதியளவிலும் அதில் எவ்வித பழுதுபார்ப்பும் கராஜில் இருந்தது.

(ஆ) சமூக சேவைகள் அமைச்சின் 2015 சனவரி 06 ஆந் திகதிய NSPD/3/2015 ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவிப்பணம் அவர்களது வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட வேண்டுமாயினும், அக்கரைப்பற்று பிரதேச செயலகம் ரூபா 2,892,000 ஐக் காசாக வழங்கியிருந்தது.

(இ) அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குரிய 03 மோட்டார் சைக்கிள்களுக்கு கடந்த 4 ஆண்டுகளாக வருமான அனுமதிப்பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ் என்பவற்றைப் பெற்றிராததுடன், அவற்றினது நாளாந்த ஓட்டக் குறிப்புக்களும் பேணியிருக்கவுமில்லை.

(ஈ) பதியதலாவ பிரதேச செயலகத்தில் 2015 திசெம்பர் 31 அன்று ஒப்பந்த வேலை ஒன்றிற்கென வரையப்பட்ட ரூபா 2,632,890 பெறுமதியான 02 காசோலைகள் குறித்த ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்படாது தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஏப்ரல் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அவை கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளாகவும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

(உ) உஹண பிரதேச செயலகத்திற்குரிய 2 மோட்டார் சைக்கிள்கள் முறைப்படி ஒப்படைக்கப்படாது 2008 ஆம் ஆண்டு தொடக்கம் உதவி திட்டமிடல் பணிப்பாளராலும் 2014 தொடக்கம் நிர்வாக கிராம உத்தியோகத்தராலும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ஊ) மஹாஓயா பிரதேச செயலகத்தில் காசோலைகள் முறைப்படி வழங்கப்பட்டிராததால் 2015 ஆம் ஆண்டின் முதல் 08 மாதங்களில் ரூபா 443,688 பெறுமதியான 23 காசோலைகள் பொருத்தமற்றவர்களது பெயரில் வரையப்பட்டதாலும் ஏனைய அச்சிடல் தவறுகளாலும் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

**3.15 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளவாறான பதவியணியும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 88 | 83 | 05 | - |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 41 | 11 | 30 | - |
| (iii) | இரண்டாந் தர மட்டம் | 1,201 | 1,041 | 160 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 214 | 231 | - | 17 |
| | மொத்தம் | 1,544 | 1,366 | 195 | 17 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதான சிரேட்ட மட்டப் பதவியாகிய உதவிப் பிரதேசச் செயலாளர் பதவிகள் ஐந்தும் வெற்றிடமாகவும் அவற்றிற்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையும் காரணமாக குறித்த பிரதேச மக்களுக்குப் போதியளவு சேவையை வழங்குவது பெருமளவு பாதிக்கப்பட்டுமென அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதானமாக, தொழில் நுட்ப உத்தியோகத்தர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் 18 உம் வெற்றிடங்களாக உள்ளமை மற்றும் அப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக பிரதேச செயலகங்களில் ஒப்பந்த நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதும் கண்காணிப்பதும் திருப்திகரமற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது.